1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) பெரிய சாடம் பட்டி அரிசன ஸ்டார்ச்சு மற்றும் சவ்வரிசி தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம் 8—6—1982 அன்று பதிவு செய்யப்பட்டது. இது இன்னமும் உற்பத்தியைத் துவங்கவில்லை.

(ஆ) இப்பகுதியில் இந்த மாதிரி வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கம் தொடங்க தற்போது எதுவும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

திரு. செ. செம்மலை : இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கத்தினுடைய முதலீடு எவ்வளவு என்ற விவரத்தையும், மேற்படி சங்கத்தில் எத்தனை உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஆகும் செலவு தற்போது ரூ. 7.05 இலட்சத்திலிருந்து ரூ. 16 இலட்சமாக அதிகமாகியிருக்கிறது. இதில் 50 ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இன்னும் இந்தச் சங்கத்தினுடைய பணிகள் துவங்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் தாமதத்திற்கான காரணம் என்ன ? அந்தக் காலதாமதம் இப்போது தவிர்க்கப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : காலதாமதத்திற்கான காரணம் நிலம் கிடைக்காமல் இருந்தது. தற்போது நிலம் கிடைத்திருக்கிறது. இந்தத் திட்டம் விரைவில் செயல்படத் துவங்கும்.

வேர்கிளம்பி என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற் கூட்டுறவு இரப்பர் தொழிற்சாலை.

386—*(வினா எண். 21302) **திரு. டி. மணி :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையத்தின் கீழ் வேர்கிளம்பி என்னுமிடத்தில் தொழிற் கூட்டுறவு ரப்பர் தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) அத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) அரசு பங்கு மூலதனம் ரூ. 2.00 இலட்சம்.

(ஆ) விரைவில் கட்டுமானப் பணி துவங்கும்.

திரு. ஜே. ஹேமசந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்கான கால் கோள் நடு விழா 13–6–1983 அன்று நடைபெற்றது என்றாலும், இன்று வரையில் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அந்தக் காலதாமதத்தைத் தவிர்த்து, உடனடியாக கட்டிடங்களை ஆரம்பிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய தற்போதைய மதிப்பீடு ரூ. 34 இலட்சமாகும். இதற்கான நிலம் 21–2–1983-ல் வாங்கப்பட்டது. திருத்திய திட்டத்தின்படி கட்டிட வரைபடம் மற்றும் மதிப்பீடு ஏற்கப்பட்டு, இத்துறையின் கட்டுமானப் பிரிவில் இருக்கிறது. இந்தத் திட்டத்தினை 1984–85 ஆம் ஆண்டில் முடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தொண்டாமுத்தூரில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கான கட்டிடம் கட்டும் திட்டம்.

381 (*வினா எண். 17786) திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர், பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கான கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) தொண்டாமுத்தூர் தொகுதி சின்னத்தடாகம் பிற்பட்டோர் நல மாணவியர் விடுதிக்குக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) இல்லை.

(ஆ) இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS